கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்ததற்கிணங்க

# நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக்குழு அறிக்கை - கால அவகாசம் நீட்டிப்பு!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து "கள ஆய்வு" செய்வதற்காக 38 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இக்குழுவானது, மாவட்டத்திற்குட்பட்ட தொகுதி வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு அனைத்துமட்ட கழக நிர்வாகிகளை நேரடியாக சந்தித்து கருத்துகளையும் அவர்களின் பரிந்துரைகளையும் பெற்று கள ஆய்வு அறிக்கையை ஜூன் 5ஆம் தேதிக்குள் கழகத் தலைவர் அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவித்திருந்தோம்.

தற்போது ஆய்வுக்குழுவினர் கழகத் தலைவர் அவர்களிடம் காலஅவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்று கோரியதின் அடிப்படையில் வரும் ஜூன் 10ந் தேதி கள ஆய்வு அறிக்கையினை சமர்ப்பிக்க கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
நாள் : 28.05.2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

ஒன்றிய பா.ஜ.க. அரசின் அலட்சியத்தால்

# இந்தியா முழுக்க எரிசக்தி தட்டுப்பாடு!

## நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி குற்றச்சாட்டு!



புதுடெல்லி, மே 29 - தி.மு.க துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கடந்த 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் எரிசக்தி சேமிப்பு குறித்து கேள்வி எழுப்பியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில், இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில் வெறும் 10 நாட்களுக்கு மட்டுமே பெட்ரோலியப் பொருட்களை இருப்பு வைத்திருப்பது கவலைக்குரியது என தான் கூறியதை எடுத்துரைத்துள்ளார்.

அப்போது இது குறைவான கையிருப்புதான் என்பதை ஒன்றிய அரசே ஒப்புக் கொண்டதாக குறிப்பிட்டுள்ள கனிமொழி கருணாநிதி எம்.பி., கடந்த 2 ஆண்டுகளாக பெட்ரோலிய கையிருப்பை அதிகரிக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம்சாட்டியுள்ளார்.

உலக அளவில் சிக்கல்கள் அதிகரித்து வரும் நிலையில், பெட்ரோலிய பொருட்கள் இருப்பு வைப்பதை விரிவுப்படுத்தும் பணி மிக மெதுவாக நடைபெறுவதாகவும், நீண்டகால திட்ட மிடல் மற்றும் எரிசக்தி பாதுகாப்பில் அலட்சியம் காட்டப்படுவதாகவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மோடி ஆட்சியில் வெற்று பேச்சுகளும், பொய் பித்தலாட் டங்களும், தாமதங்களும் மட்டுமே நடைபெற்று வருவதாக கனிமொழி கருணாநிதி எம்.பி. விமர்சித்துள்ளார்.

---

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும்!

## மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் வேண்டுகோள்!



*திருவள்ளூர் மே 29:-*

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஒன்றியம், நகரம், பேரூர் கழகங்களில் கழகத்தினர்கள் சிறப்பான முறையில் விழாவை கொண்டாட வேண்டும் என மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், சமூக நீதி கொள்கைக்கும் மிகப்பெரிய பங்காற்றிய தலைவர். பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்கிய சட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், சமத்துவபுரம் திட்டம், உழவர் சந்தை, தமிழ் மொழிக்கான செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்தது, மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஏழை மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் உள்ளிட்ட எண்ணற்ற சாதனைகளை தமிழகத்திற்கு வழங்கியவர் கலைஞர்.

அவரது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கழக இந்நாள் மற்றும் முன்னாள் பொறுப்பாளர்கள், மூத்த முன்னோடிகள் அனைவரும் தங்களது பகுதிகளில் கழகக் கொடியேற்றி, தோரணங்கள் அமைத்து விழாவை வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும்.

மேலும் ஏழை, எளிய மக்களுக்கு பயன்படும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும். பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், பல்வேறு காப்பகங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல் உள்ளிட்ட சமூக நலப்பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் மற்றும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்காக செய்த முக்கிய சாதனைகளை பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். எனவே கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை மக்கள் மத்தியில் சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்று மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் மாநகர பொது உறுப்பினர்கள். கூட்டம் மாநகர அவை தலைவர் கே.ஏ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர். க. சுந்தர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்டு ஆறுமுகம், சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், திருமதி நித்யா சுகுமார் உள்ளிட்ட மாநகர பகுதி கழக நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.


# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்பும் அறனுமாய் இருந்து
எங்களை விட்டுப்பிரிந்தாய்
உன் நினைவுகளே எங்களுக்கு
வழிகாட்டும் ஒளிவிளக்கு !



திருமதி M.A. பரமேஸ்வரி M.A.,B.L.



என்றும் நீங்கா நினைவுகளுடன்

ஆ.இராசா M.P
துணைப்பொதுச்செயலாளர் தி.மு.க

செல்வி.மயூரி இராசா MSc., LLM (UK)

மற்றும்
குடும்பத்தினர் & உறவினர்கள்
வேலூர் கிராமம், பெரம்பலூர் மாவட்டம்